07 APR 2009
Eastern University, Sri Lanka

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## மூன்றாம் வருட பொதுக்கலைமாணித் தேர்வு - 2006/2007 (வெளிவாரி)
## (ஏப்ரல்/மே 2009)

**PS 302** அரசியற் கட்சிகள், அமுக்கக் குழுக்கள், பொதுசன அபிப்பிராயம்

நேரம் : 03 மணித்தியாலங்கள்

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

01. அரசியற் கட்சிகள் தோன்றுவதற்கான காரணிகளை விளக்குக.

02. (அ) அரசியற் கட்சியின் ஒழுங்கமைப்பினை தெளிவாக்குக.
    (ஆ) அரசியற் கட்சிகளின் குறைபாடுகளைப் பரிசீலிக்குக.

03. அரசியற் கட்சிகளின் பணியினை பின்வருவனவற்றுடன் தொடர்புபடுத்தி ஆராய்க.
    (அ) சிதறியுள்ள பொதுசன அபிப்பிராயத்தை ஒன்று திரட்டுதல்.
    (ஆ) வாக்காளர்களை அரசியல் ரீதியாக அறிவூட்டுதல்.
    (இ) சமூகத்தினை நவீனமயமாக்குதல்

04. (அ) இந்தியாவில் பாரதீய ஜனதாக் கட்சியின் தோற்றத்தினை விளக்குக.
    (ஆ) அதன் கொள்கைகளைப் பரீசீலிக்குக.

05. "இலங்கையின் கட்சி அரசியலை அவதானிக்கின்ற பொழுது கட்சிகள் பிளவடைந்து செல்லுகின்றபோக்கை பொதுவாக அவதானிக்க முடியும்". இக்கூற்றினை ஏற்றுக்கொள்கின்றீரா? உமது விடையினை எடுத்துக் காட்டுக்கள்மூலம் ஆராய்க.

06. (அ) அமுக்கக் குழுக்களுக்கும் அரசியற் கட்சிகளுக்கும் இடையிலான வேறுபாடுகளை விளக்குக.

    (ஆ) அமுக்கக் குழுக்கள் தமது நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு கையாளும் உத்திகளை ஆராய்க.

07. அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகளில் அமுக்கக் குழுக்களின் பங்களிப்பினை நுணுக்கமாக ஆராய்க.

08. பொதுசன அபிப்பிராயத்தை உருவாக்கும் பின்வரும் முகவர்களின் பங்களிப்பினை மதிப்பிடுக.
    (அ) பத்திரிகைகள்
    (ஆ) பிரச்சாரம்
    (இ) அரசியற் கட்சிகள்

*********